**O.S.No.101/2023** **தேதி – 11.11.2025**

**வா.சா.1.– ஸ்வேதா**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் இந்த வழக்கை எனது தகப்பனாரின் சொத்துக்களின் மீது 1/3 பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நானும், 2 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் சொத்துக்கள் இந்த வழக்கில் குறிப்பிட்ட சொத்துக்கள் போக எனது தகப்பனார் பெயரில் வாகனங்களும் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஆவணப்பட்டியலில் 5 வாகனங்கள் எனது தகப்பனார் பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் மூலமாக பாகப்பிரிவினை கோரி 2 பிரதிவாதிகள் மீது சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பிற்கான பதிலிலேயே 1ம் பிரதிவாதி 1/3 பாகம் பிரித்திட சம்மதம் தெரிவித்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறக்கும் வரை அவரது சொத்தை பொறுத்து எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் என்னை உள் நுழைய அனுமதிக்கவில்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள எனது தகப்பனாரின் கல்லறைக்கு செல்ல 2ம் பிரதிவாதி என்னை அனுமதிக்கவில்லை. மேற்படி சொத்துக்களில் உள் நுழைவதற்கோ அல்லது எனது தகப்பனாரின் கல்லறைக்கோ என்னையும், 1ம் பிரதிவாதியையும் அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். இந்த 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.